பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 புரட்டாசி 18 ஜுல்ஹஜ் 11 இதழ் 234

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-10-79

RECEIVED LIBRARY




வூல்ப் மின்சார உபகரணங்களுக்கு விஜயம் செய்யுங்கள்

வடமாகாணத்தக விநியோகஸ்தர்:

நியூதோன் எலைக்றிக்கல்ஸ்

141-143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7016.

## இந்திய தேர்தல் ஜன.7க்குமுன் முடிவடையும்

புதுடில்லி, செப். 3

இந்திய லோகசபைக்கான இடைத் தேர்தல் அடுத்தவருடம் ஜனவரி 7ம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்படும் என்று தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார். தேர்தலுக்கான திகதி பிறகு அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## முரண்பாடான அம்சங்கள் திருத்தப்பட்டு

# அத்தியாவசிய சேவைகள்

# சட்டம் நிறைவேறியது

## சிறிலங்கா-கூட்டணி எதிர்ப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் சட்டமூலம் நேற்று அதிகாலை சுமார் 6 மணியளவில் பாராளுமன்றத்தில் 107 அதிகப்படியான வாக்குகள் பெற்று நிறைவேறியது.

சட்டமூலத்தை ஆதரித்து 128 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் பதிவாகின.

இச்சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசியல் சட்டத்துக்கு முரணாகவிருப்பதாகவும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டுமென்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அரசியல் சட்டத்திற்கு முரணான பகுதிகள் திருத்தப்படுமிடத்தில் சர்வஜன வாக்கெடுப்புக்குவிட வேண்டிய அவசியமில்லையென்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இதன்படி சட்டமூலம் உரிய முறையில் திருத்தப்பட்டு சபையில் தாக்கலாகி நிறைவேற்றப்பட்டது.

தமிழர் விடுதலை கூட்டணியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் எதிர்த்து வாக்களித்தனர்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா சபையில் பேசுகையில் இச் சட்டமூலம் தொழிலாளர்களை அடக்குவதற்கு கொண்டுவரப்படவில்லையென்றும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கே கொண்டுவரப்பட்டதாகவும் கூறினார்.

அவர் பேசுகையில், மக்களின் நன்மைகருதி சமாதான வழிகளுக்கு ஆதரவளிக்கப்படுமென்றும் வன்செயலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினார்.

கடந்த காலத்தில் அபிவிருத்தி வேலைகள் நடந்திருக்கின்றதா என்றும், நிதி செலவிடப்பட்டிருக்கிறது என்றும் கேட்ட பிரதமர், அபிவிருத்தி வேலைகளை தடுக்க முடியாதென்றும் கூறினார்.

தொழிலாளர்களும், தொழிற்சங்க வாதிகளும், நாட்டின் முன்னேற்றத்திற்காக சேவையாற்ற வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

சில நாடுகளில் தொழிற்சங்கங்கள் பெரும் சுமைகளை சுமத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலி இடைத்தேர்தலில் சகலரும் சேர்ந்து ஒருவரை போட்டிக்கு நிறுத்தினாலும் ஐ. தே. கட்சி அபேட்சகரே வெற்றி பெறுவார் எனப்பிரதமர் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய இராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சர்வதேச தொழிலாளர் சாஸனத்துக்கு இச் சட்டம் முரண்படவில்லையென்று குறிப்பிட்டார். (உ)

மானிப்பாய் மகளிர் கல்லூரி

நாட்டிய நாடகம்

கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் ஒக்டோபர் 6ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற இருந்த நாட்டிய நாடகம் மண்டபம் வசதியின்மையால் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை அதே மண்டபத்தில் நடைபெறும். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

3746 அதிபர்

விபுலானந்தர் முத்திரை

## யாழ்.நகரிலும் வெளியிட அரசாங்க அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விபுலானந்தர் நினைவு முத்திரை வெளியீட்டு விழாவை யாழ்ப்பாணத்திலும் இம்மாதம் 15ம் தேதி கொண்டாட யாழ் அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

சுவாமி விபுலானந்தர் முத்திரை வெளியீட்டு விழா இம்மாதம் 15ம் தேதி கொழும்பிலும் மட்டக்களப்பிலும் ஒரே சமயத்தில் நடைபெற இருக்கிறது.

முத்திரை வெளியிட நடவடிக்கை எடுத்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் அதேதினம் யாழ்ப்பாணத்திலும் முத்திரை வெளியீட்டு விழாவை நடத்த ஏற்பாடு செய்யுமாறு அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கோரியுள்ளார். (உ)

வெளியிலே அமைதியை ஏன் தேடுகிறாய்
அமைதி இவ்வுலகில் இல்லை
அமைதி என்னிடம் இருக்கிறது.



குருமகராஜ்ஜி

அவரது சீடர் யோரம் வைஸ் அவர்களின் சத்சங்கம் போயா தினமாகிய நாளை 5-10-79 வெள்ளி மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிகழும். அனைவரும் வருக,

-தெய்வீக ஒளி சங்கம்

3699

"மீனவ நண்பன்" "பிரியா" "திரிசூலம்"

மற்றும் புதிய தமிழ், ஆங்கில திரைப்படங்களை வண்ணக்கலரில் 26 அங்குல ரெலிவிஷன் திரையில் பார்த்து மகிழ இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

★ க. செல்வராஜா அன் பிறதர்ஸ் ★

37, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம். — Telephone: 7517

வீடியோ கசட் ரேப் றெக்கோடரை உங்கள் இல்லங்களிலேயே பார்த்து மகிழலாம்.

(பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்)

3749

# சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை ஒட்டி யாழ். றோட்டறிக் கழகம் அளிக்கும்

## சுகாதாரக் கல்வி - பாடசாலைகளுக்கான பரிசுப்போட்டி

பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளின்கீழ் கோடிடவும்:

[1] உலகத்தில் அண்மையில் முற்றாக அகற்றப் பட்ட தொற்றுநோய் எது?
அம்மை-செப்பளிப்பான் - இன்னமுற்று - மலேரியா.

[2] முக்கூட்டுத் தடுப்பு ஊசிமூலம் குழந்தைகளுக்கு வராது தடுக்கக்கூடிய நோய்கள் எவை?
தொண்டைக்கரப்பன்-இளம்பிள்ளைவாதம்-காசநோய் ஏற்பு - எலும்புருக்கி.

[3] முதல் ஆறுமாதங்களுக்குச் சேய்களுக்கு ஏற்ற சிறந்த பால் எது?
பசுப்பால் - தாய்ப்பால் - சோயா அவரைப்பால்;

[4] மிருகங்களில் இருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்கள் எவை?
அம்மை - நெருப்புக் காய்ச்சல் - கொள்ளைநோய்

[5] நுளம்பினால் தொற்றப்படும் நோய்கள் எவை?
டெங்குக்காய்ச்சல் - ஏற்பு - காசநோய் - யானைக் கால்நோய் -மலேரியா.

[6] சந்ததி வழியாகவரும் நோய்கள் எவ்வாறு பெற்றோரிடமிருந்து குழந்தைகளை அடைகிறது?
பெற்றோரிடமிருந்து தொற்றுதல்மூலம் - சந்ததிச் சுவடுகள் மூலம்

[7] இலங்கையரின் உணவுவகைகளில் எந்தச்சத்துக் குறைவாகக் காணப்படுகிறது?
கொழுப்புச் சத்து— மாச்சத்து புரதச்சத்து.

[8] உயிர்ச்சத்து "ஏ" கூடுதலாக உள்ள பொருளைக் கூறுக?
வல்லாரை - சோயா அவரை -இறைச்சி-பால்.

[9] மிதப்புள்ள பற்களுக்கு "கிளி"ப்போட்டு அழகு செய்ய உகந்த வயது எது?
11 - 13 வரை; 14 - 16 வரை; 18 - 20 வரை.

[10] ஆரோக்கியமான பற்களுக்குத் தேவையான வைட்டமின் சத்துக்கள் எவை?
"ஏ"—"பி"—"ஸி"—"டி"—"ஈ"

பகுதி II

பின்வரும் கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை"யென்று விடையளிக்கவும்.

[1] பாலில் உள்ள புரதச்சத்து கசீனாகும் ( )

[2] ஏழைகள் தங்கள் புரதச்சத்தை அரிசியில் இருந்து பெறுகிறார்கள் ( )

[3] இருந்தரவலம் செய்வதால் ஒருவரின் உடம்புக்குக் கெடுதல் ஏற்படுமா? ( )

[4] தெருவிபத்தில் காயமுற்ற உடனே ஏற்புவலி தடுப்பூசி போடுவித்தல் வேண்டுமா? ( )

[5] கர்ப்பிணிகள் ஏற்புத் தடுப்பூசி போடுதல் கூடாதா? ( )

(6) குழந்தைகளுக்கு ஏற்படும் கிரந்தை மாற்றாது விட்டால் இருதயம் முதலிய உறுப்புகளைப் பாதிக்குமா? ( )

[7] வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குக் கூடுதலாகத் தண்ணீர்ப் பதார்த்தங்கள் கொடுப்பது தவறு? ( )

[8] "பயோறியா" என்று கூறப்படும் பல் இழைய நோயை ஆரம்பத்தில் பல் வைத்தியத்தினால் மாற்றமுடியுமா? ( )

[9] பற்சூத்தை ஒரு பல்லினின்றும் மற்றைய பற்களுக்குத் தொற்றும் தன்மையுடையதா? ( )

[10] ஒவ்வொரு சாப்பாட்டிற்கும் பின்பு பற்களைத் துலக்குதலே சிறந்தபற்பாதுகாப்பு ஆகுமா? ( )

பகுதி III

பின்வரும் கேள்விகளுக்குத் தகுந்தவிடைதருக:

[1] குழந்தை பிறந்தவுடன் ஏன் அழுகிறது?

[2] தொற்றுநோய் பரவும் வழிகளை நிரைப்படுத்திக் கூறுக? ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்களைக் கூறுக?

[3] பின்வரும் தொற்று நோய்களுக்கு நீங்கள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு என்ன?
(i) மலேரியா
(ii) காசநோய்
(iii) வயிற்றோட்டம்

[4] பின்வரும் ஆபத்தான கட்டங்களில் நீங்கள் செய்யக்கூடிய முதலுதவி என்ன?
(i) வலிப்பு நோயால் அவஸ்தைப்படும் ஒருவருக்கு-
(ii) விடப்பாம்பினால் கடியுண்ட ஒருவருக்கு-
(iii) நீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு-

[5] வயிற்றில் வளரும் பூச்சிகளில் முக்கியமான மூன்றைக் கூறுக? அவற்றைத் தடுப்பதற்குச் சிறந்த வழிகள் எவை?

[6] உங்கள் வீட்டில் இருக்கும் கைக்குழந்தைக்குப் பால் பருக்கும்பொழுது "பிரக்கடித்து" மூச்சுத் திணறினால் என்ன செய்வீர்கள்?

[7] காதுக்குள் சிறு பூச்சிசென்று இரைச்சல் செய்தால் உடனடியாக நீங்கள் என்ன செய்வீர்கள்?

[8] வெண்மையான - ஆரோக்கியமான பற்களைப் பெறுவதற்கு குழந்தைகள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு எவை?

[9] பிள்ளைகள் தொடர்ந்து விரல் சூப்புவதை சுயமாகத் தடுப்பதற்கு பல்வைத்தியத்தில் இடம் உண்டா?

[10] கன்னத்தைத் தாய்மையாக வைத்திருக்க மாணவர் கைக்கொள்ளவேண்டியது யாது?

இந்தியத் தேர்தல் ஒத்திவைப்பு கோரிக்கை

# ராஜ்நாராயணை சரண்சிங் பகிரங்கமாகக்கண்டித்தார்!

## அரசு சார்பில் பேச அவருக்கு உரிமை இல்லை என்றும் கூறுகிறார் பிரதமர்

புதுடில்லி, அக்- 3

இந்திய இடைத்தேர்தலை ஒத்திவைப்பது குறித்து மக்கள் கட்சியின் செயல்தலைவர் திரு. ராஜ்நாராயண் திரும்ப திரும்ப கூறிவருவதை அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான திரு சரண்சிங் நேற்று பகிரங்கமாக கண்டித்தார்.

திரு. ராஜ்நாராயணின் பேச்சுக்கள் காரணமாக தாம் தமது பதவியை ராஜினாமாச் செய்யப்போவதாகவும் திரு சரண்சிங் தெரிவித்தார்.

தேர்தலை ஒத்திவைப்பதா இல்லையா என முடிவு செய்யும்பொறுப்பு அரசினுடையது அதைவிடுத்து மக்கள் கட்சியின் செயல் தலைவர் திரு ராஜ்நாராயணுக்கு அரசின் சார்பில் பேச உரிமை கிடையாது என்றும் திரு சரண்சிங் கூறினார்.

புதுடில்லியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;

தேர்தலை ஒத்திவைக்கவேண்டும் என திரு. ராஜ்நாராயண் அடிக்கடி கூறிவருவதால் அரசு தேர்தலை ஒத்திவைப்பதில் அக்கறை கொண்டுள்ளது என ஜனதா கட்சித் தலைவர்களான திருவாளர்கள் சந்திரசேகரும் ஜெகஜீவன்ராமும் கூறிவருகின்றனர். திரு ராஜ்நாராயணின் பேச்சுக்கள் எதிர்க்கட்சியினருக்குப் பிடிகொடுப்பதாகவே உள்ளது.

திரு ராஜ்நாராயணின் ராஜ்கோர்ட்டை தூய்மைப்படுத்தும் இயக்கம் ஏற்கனவே எம்மை சங்கடத்தில் ஆழ்த்திவிட்டது.

தேர்தலை ஒத்திவைப்பது குறித்த தமது பேச்சுத்தொடர்பாக அவர் மன்னிப்புக்கோரியதனுலும் எமது நண்பர்கள் கேட்டுக்கொண்டதனுலுமே நான் எனது பதவியை ராஜினாமாச்செய்வதென்ற யோசனையை கைவிட்டுவிட்டேன். (இ)

"தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்"

# நெடுமாறன் தலைமையில் புதியகட்சி!

சென்னை, அக். 3

இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்நாடு பொதுச்செயலாளர் திரு பி. நெடுமாறன் புதியகட்சி ஒன்றை அமைத்துள்ளார்.

இக்கட்சிக்கு தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் எனப் பெயரிடப்பட்டு அதன் தலைவராக திரு. நெடுமாறன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மதுரையில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே புதிய கட்சி அமைக்கப்பட்டு அக்கட்சியின் தலைவராக திரு. நெடுமாறன் கட்சி ஆதரவாளர்களால் தெரிவுசெய்யப்பட்டார்.

தி. மு. க. இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாட்டுக்கு இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் புதிய கட்சி ஆதரவாளர்கள் சகலரும் இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ)

### மீண்டும் தலைவர்

(நீர்வேலி)

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக மீண்டும் திரு வ. நடேசபிள்ளை தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக திரு. க. கனகலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். (இ)

## சரண்சிங்கிடம் 'ராஜ்' மன்னிப்புக்கோரினார்

புதுடில்லி, அக். 3

இந்திய தேர்தலை ஒத்திவைப்பது குறித்து தாம் அடிக்கடி கூறிவந்தது தொடர்பாக திரு. ராஜ்நாராயண் பிரதமர் திரு. சரண்சிங்கிடம் மன்னிப்புக் கோரினார்.

வறட்சி காரணமாக தேர்தலை ஒத்திவைக்குமாறு விவசாயிகள் விடுத்த கோரிக்கையையே தாம் அடிக்கடி கூறிவந்ததாகவும் திரு. ராஜ்நாராயண் பிரதமரிடம் கூறினார்.

திரு. ராஜ்நாராயண் மன்னிப்புக் கோரியதை அடுத்து தமது பதவியை ராஜினாமாச் செய்யும் யோசனையை திரு. சரண்சிங் தாம் கைவிட்டுள்ளதாகத் தெரிவித்தார். (இ)

## பாகிஸ்தானில் 16 அரசியல் கட்சிகளுக்கே அங்கீகாரம்!

### 40 மனுக்கள் நிராகரிப்பு

இஸ்லாமாபாத், அக் 3

பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு 16 கட்சிகளுக்கு மட்டுமே அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

அங்கீகாரம் கோரி மனுச் செய்திருந்த 40 கட்சிகளின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் இராணுவ அரசினால் தூக்கிலிடப்பட்ட முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலிபூட்டோவின் மக்கள் கட்சி அங்கீகாரம் கோரி மனுச் செய்யாமலேயே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. (இ)

விடைகளைத் தெளிவாக எழுதி உங்கள் பாடசாலைப் பெயருடனும், வகுப்பாசிரியரின் கையெழுத்துடனும், 'ஈழநாடு' கேள்விக் கூப்பனுடன் சேர்த்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். பரிசுகள் பற்றிய அறிவிப்புகள் பின்னர் தரப்படும்.

றோட்டேறியன் டாக்டர் பா. சோ. பாரதி, பல் வைத்தியசாலை, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போட்டி முடிவு திகதி: 6-10-79

யாழ். றோட்டறிக் கழக மாணவர் சுகாதாரப் போட்டிக் கூப்பன்

மாணவனின் முழுப்பெயர்.................

விலாசம்.................

பாடசாலைப் பெயர்.......................

வகுப்பாசிரியரின் கையொப்பம்.....................

...........................

மாணவனின் கையொப்பம்

(அரியாலை)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் கல்விச் சகாய நிதிக்கென நடாத்தும் கொடித்தினவிழா ஒக்டோபர் மாதம் 5ந்திகதி முதல் 14ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

